DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE III, TRICHIRAPPALLI.

Present : Thiru. K.R.Balaji B.A,B.L.(Hons)

Judicial Magistrate III, Tiruchirappalli..

CC.167/2023

Deposition of witness for PW.1

Name : ஜெயசீனு

Father /Wife of : கலியபெருமாள்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 36/23

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 24.05.2023

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

1. நான் தற்போது மண்ணச்சநல்லூரில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2022 ம் தேதி காலை 11.30 மணிக்கு மல்லாட்சிபுரம் ரயில்வே கேட் அருகே எனது TN 48 AH 3346 என்ற பதிவெண்கொண்ட ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு எனது வீட்டிற்கு சாப்பிட சென்றேன். மதியம் 12.00 மணிக்கு வந்து பார்த்தபோது எனது வாகனத்தை காணவில்லை. பிறகு எனது நண்பர்களை அழைத்து வந்து தேடிப்பார்த்தேன். தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை.

2. பிறகு ஜீயபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் அ.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு ஜீயபுரம் காவல் நிலையத்திலிருந்து வண்டி கிடைத்துவிட்டதாக கூறினார்கள். நான் காவல் நிலையம் சென்று எனது இருசக்கர வாகனத்தை அடையாளம் காண்பித்தேன். எனது வண்டியில் நம்பர் பிளேட் காணாமல் போயிருந்தது.

3. ஆஜர் எதிரிகள் தான் வண்டியை திருடிச்சென்றதாக போலீசார் கூறினார்கள். பிறகு நீதிமன்றத்திலிருந்து எனது வண்டியை இடைக்காலப்பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். இன்று எனது வாகனத்தை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வாகனம் தான் என்னுடைய ஸ்பிளண்டர் பிளஸ் வாகனம் ஆகும். (**அந்த புகைப்படங்கள் முறையே அ.சா.ஆ.2/அ.சா.1 முதல் அ.சா.ஆ.6/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வண்டி காணாமல் போனவுடன் அது குறித்த தகவலை உடனடியாக காவல் நிலையத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்ற தகவல் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த காரணத்திற்காக 5 ½ மாதங்கள் காலதாமதமாக புகார் அளித்தேன் என்று அ .சா.ஆ.1ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் புகாரை எந்த தேதியில் கொடுத்தேன் என்று தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியதான்.

2. புகார் கொடுத்து மூன்று நாட்கள் கழித்து தான் வாகனத்தையும் எதிரிகளையும் அடையாளம் கண்டு கொண்டேன் என்றால் சரிதான். நான் சென்று பார்த்தபோது எனது வண்டியில் நம்பர் பிளேட் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்தில் உள்ள அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 வரையிலான புகைப்படங்களில் உள்ள வாகனத்தில் நம்பர் பிளேட் உள்ளது என்றால் சரிதான்.

3. சொன்ன தேதியில் எதிரிகளை எனக்கு நிலையத்தில் அடையாளம் காட்டவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

Taken over by me in open court read over of the witness and admitted by the witness to be correct

(Sd/–K.R.Balaji)
Judicial Magistrate III,
Tiruchirappalli.